# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:12 டிசம்பர் 2023 தனிபிரதி– ரூ.20/– ஆண்டு சந்தா– ரூ.200/–
VOL: 9 ISSUE NO : 12 December 2023 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-

**உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மை சந்தித்திருக்கிறது.**

லூக்கா 1:79






என் பெயர் ஷைனு. என்னுடைய மூத்த மகளுக்கு 8 வயது. ஒரு நாள் மகளுடைய கண்ணிலிருந்து இரத்தம் வந்தது. மருத்துவமனைக்கு அழைத்து சென்றப்பொழுது மகளை பரிசோதித்த மருத்துவர்கள் மகளுடைய platelet குறைவாக 6000 தான் இருக்கிறது என சொன்னார்கள். **Normal Value 1.5 Lakhs to 4 Lakhs** இருக்க வேண்டும். அதன் பின் மகளுக்கு Sudden Thrombocytopenia சிகிச்சை அளித்து அனுப்பினார்கள். சிறிது தான் platelet ஏறினது. அதன் பின் ஏறவில்லை குறைந்துக் கொண்டே வந்தது.

மகளுடைய இந்த நிலை மிகவும் கவலைக்கிடமானது. வெகு சீக்கிரத்தில் மூளையிலிருந்தும், வாயிலிருந்தும், வயிறு, காது மற்ற எல்லா பகுதிகளிலிருந்தும் இரத்தம் கட்டுப்படுத்த முடியாத அளவில் வெளியே வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பொதுவாகவே இவ்வளவு குறைந்த உறையும் அணுக்கள் உள்ளவர்கள் இறப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்று அவளைப் பரிசோதித்த மருத்துவர்கள் கூறியவுடன் நாங்கள் மிகவும் பயந்தோம். எவ்வளவு சிகிச்சை எடுத்தும் குறைந்த அளவில் தான் ஏறும் பிறகு இறங்கி விடும்.

ஆகவே கடந்த அக்டோபர் மாதம் நாங்கள் அனைவரும் திருச்சியிலுள்ள அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு வந்திருந்து **Dr.** ஆனந்த ஸ்திரா அவர்களை நேரில் சந்தித்தோம். சகோதர் மருத்துவ ஆராய்ச்சியாளர் வேலை செய்ததின் நிமித்தம் ஜெபித்துவிட்டு சில காரியங்களை எங்களிடம் கூறினார்கள்.

இந்த வியாதிக்கும், மருத்துவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இது பொறாமையால் பிள்ளையின் மீது ஏவப்பட்ட ஏவல் ஆவிகள் என்று கூறி பிள்ளைக்காக ஜெபித்தார்கள், ஏவல் ஆவியை சபித்தார்கள்.

அதன்பின் மருத்துவமனை சென்று பரிசோதனை செய்ததில் உறையும் அணுக்கள் 1.50 லட்சமாக மாறியது. பிறகு 2.50 லட்சமாக மாறியது. கடைசியாக 5 லட்சமாக உயர்ந்தது. மருத்துவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

மகளுடைய ஜீவனை பாதுகாத்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம். மகளுக்காக ஜெபித்து, ஆலோசனை தந்த சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

–திருமதி. ஷைனு, திசையன்விளை.

# அன்பரின் ஊழியம்

மலர் : 9 ★ டிசம்பர் 2023 ★ இதழ் 12


## உங்கள் ஆசிரியரிடமிருந்து...



Dr. ஜேன் ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகள் அனைவருக்கும்,

சீக்கிரம் வரப்போகும் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த **வருடத்தின் துவக்கம் முதல் இந்த டிசம்பர் மாதம் வரை நம்மை நடத்தி வந்த எபினேசராகிய கர்த்தரை துதித்து போற்றக்கடவோம். நம்முடைய பெலவீனங்களின் மத்தியிலும், நம்முடைய இயலாமையின் மத்தியிலும், வறுமையிலும், பஞ்சத்திலும், ஆபத்திலும் கர்த்தர் நம்மை கண்ணின்மணியை போல பாதுகாத்தாரே! அதற்கு நன்றி கூறுவோம். திருப்தியாகும் அளவிற்கு போஷித்தாரே அதற்கு நன்றி கூறுவோம்.**

இம்மானுவேலாகிய கர்த்தர் உங்களோடு கூட இருந்து நீங்கள் செய்யும் சகல காரியங்களிலும் உங்களை ஆசீர்வதித்து பாது காத்து நடத்துவார். **மத்தேயு 1:23**–ன்படி தேவன் நம்மோடிருக்கிறார் எனவே, உலகத்தின் காரியங்கள் தலைகீழாக மாறினாலும் இயேசுவை பின்பற்றும் நம் ஒவ்வொருவருக்கும் அசையாத நம்பிக்கையும், நீங்காத சந்தோஷமும் உண்டு.

வரப்போகும் நாட்களில் தேவனுடைய வார்த்தையை நேசிக்கிற, தேடுகிற மக்கள் குறைந்து கொண்டே இருப்பார்கள். சாத்தான் தன்னுடைய தந்திரங்களின் மூலம் உண்மையான வேதாகமத்தை புறந்தள்ளுவான். மனுஷரால் தங்களுடைய ஆசைகளுக்கு ஏற்ப, இச்சைகளுக்கு ஏற்ப எழுதப்பட்ட வார்த்தைகள் அடங்கிய வேதாகமங்களை மக்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்வான். புதிய பொய் வேதாகமங்கள் பெருகிப்போகும். இதன் நிமித்தம் அநேகர் தேவனுடைய வார்த்தைகளை புரட்டவும் , மாம்சீகமாக தாங்கள் நினைப்பதையே வேதமாக எழுதவும் போதிக்கவும் செய்வர். **ஆமோஸ் 8:11–ல் கர்த்தருடைய வசனம் கேட்க கிடையாத பஞ்சம் உருவாகும் என பார்க்கிறோம். இந்த சூழ்நிலையிலும் நீங்கள் எச்சரிக்கையாக இருந்து தேவனுடைய வசனத்தையே தேடி ஆராய்ந்து நேசித்து அதின்படி நடக்க முயற்சி செய்யுங்கள். அப்பொழுது உங்கள் சமாதானமும், ஆசீர்வாதமும் பெரிதாய் இருக்கும்.**

**டிசம்பர் 31–ம் தேதி இரவு டெலிவரன்ஸ் திருச்சபையின் ஆலய ஆராதனையில் பங்கு கொள்ள வேண்டும் என்று நினைக்கிறவர்கள் நீங்கள் டெலிவரன்ஸ் திருச்சபைக்கு வந்து ஆண்டிறுதி ஆராதனையிலும், வாக்குத்தத்த ஆராதனையிலும் கலந்து கொள்ளலாம்.**


ஆசிரியர்/வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

சந்தா விபரம்

இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-

வெளி நாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-



24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசிஎண்: 94888 45627

காலை 9:30 மணி முதல் இரவு 7:00 மணி வரை, ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள் : 80987 42638, 0431 274122

**Telugu & Hindi: 99445 36343, Malayalam: 94889 32937, Kannada: 90031 17205**

**e-mail:** info@mojindia.org **Website:** www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K தெரு, உறையூர்,திருச்சி – 620 003.

**Address: Ministry of Jesus, 40 S.P.K.Street, Woraiyur, Trichy – 620 003**

டிசம்பர் மாதம் மட்டும் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடைபெறாது. அதற்கு பதிலாக ஜனவரி 1–ம் தேதி அன்று மாலை புத்தாண்டு வாக்குத்தத்த ஆசீர்வாதக் கூட்டம் நடைபெறும். நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அவசியம் இந்த கூட்டத்தில் பங்கு பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். வருட துவக்கத்தில் நாம் அனைவரும் இணைந்து கர்த்தருடைய சமூகத்தை நாடுவோம். **மறவாமல் இந்த நாட்களை குறித்துக் கொண்டு கூட்டங்களில் பங்கு பெற்று ஆசீர்வாதம் பெறுங்கள்.**

உங்கள் பகுதியில் கூட்டங்கள் நடக்கும் பொழுது கலந்து கொள்ளுங்கள், கூட்டத்திற்கு உதவுங்கள். உங்களுடைய ஸ்தோத்திர காணிக்கை மற்றும் பொருத்தனை காணிக்கையை ஊழியத்திற்கு தர விரும்புகிறவர்கள் எங்கள் அலுவலத்திற்கு தொடர்பு கொண்டு, முன் அனுமதி பெற்று எங்களை சந்திக்கலாம்.

கிறிஸ்துமஸ் தினத்தன்று தொலைக்காட்சி மற்றும் சமூக வலைதளங்களில் ஒளிபரப்பாகும் எங்கள் நிகழ்ச்சிகளை தவறாமல் பாருங்கள்.

## இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்

**யோவான் 1:14**

**லூக்கா 2:14**

**1 யோவான் 1:5**

உங்கள் பிள்ளைகளுக்கு புத்தாடைகள் எடுக்கும் பொழுது S.J.Saves Trust –ல் உள்ள ஏழைப் பிள்ளைகளையும் நினைத்து மறவாமல் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

எங்கள் அப்பா, அம்மா இருவருடைய நல்ல சுகத்திற்காகவும், இந்த கால சூழ்நிலையில் கர்த்தர் அவர்களுக்கு தேவையான பெலனை தரும் படியாக தொடர்ந்து ஜெபியுங்கள். எங்கள் அனைவருடைய நல்ல ஆரோக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள். உங்களுக்காக நாங்களும் தொடர்ந்து ஜெபிக்கிறோம். இஸ்ரவேலின் ஆறுதலும், இஸ்ரவேலின் மகிமையுமான இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

கிறிஸ்துவின் பணியில்
**Dr.ஜேன் ஜாஷ்வா**



# அருணோதயம்

*நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும்,*
*அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மை சந்தித்திருக்கிறது.*
*லூக்கா 1:79*



தேவசெய்தி **Dr. ஜேன் ஜாஷ்வா**

பிரியமானவர்களே! கிறிஸ்துவின் பிறப்பை ஆசரிக்கும் இந்த மாதத்தில் கிறிஸ்துவின் பிறப்பை பற்றிய சில காரியங்களை நாம் தியானிக்கப் போகிறோம். **இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மற்ற ராஜாக்களை போல, பிரபுக்களை போல உலகப் பிரகாரமான ஆடம்பரங்களோடு இருக்கவில்லை. அதற்கு நேர் எதிர் மாறாக இயேசு கிறிஸ்துவின் பிறப்பு ஒரு ஏழை மகனின் பிறப்பை போல எல்லா விதத்திலும் அசட்டை பண்ணப்பட்ட, நினைக்கப்படாத ஒரு பிறப்பாக இருந்தது.** இருப்பினும் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி இயேசுவின் பிறப்பை சார்ந்ததான சகல காரியங்களையும் செவ்வையாய் செய்தார். அந்நாட்களில் அவர் பிறப்பிலே பங்கு கொண்டவர்கள் அநேகர். சத்திரத்தை நிர்வகித்த மனிதர் முதற்கொண்டு மாட்டு தொழுவத்தை கொடுத்தவர் வரை, சாஸ்திரிகளிலிருந்து, மேய்ப்பர்கள் வரை அநேகர் தங்களையும் அறியாமல் இயேசுவின் பிறப்பில் பங்கேற்று கொண்டனர். இப்படி இதில் பங்கு பெற்றவர்களுள் ஒருவர் தான் சகரியா. சகரியா மூலம் இயேசு கிறிஸ்துவை பற்றி சொல்லப்பட்ட வார்த்தையே

**“உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம்”**
**லூக்கா 1:79.**

ஆங்கில மொழி பெயர்ப்புகளில் அருணோதயம் என்று சொல்லும் பொழுது **Rising Sun, Day Spring, Dawn** என்று எழுதப் பட்டிருக்கிறது. இதை எல்லாம் பார்க்கும் பொழுது காலையில் உதிக்கும் சூரிய வெளிச்சத்தை இது குறிக்கிறது. விடியற் காலத்தை, இரவை பகலாக மாற்றும் ஒளியை அருணோதயம் என குறிக்கிறது. ஆசாரியனாகிய சகரியா இந்த வசனத்தை தீர்க்க தரிசனமாக இயேசுவை குறித்து, அவர் பிறப்பை குறித்து கூறுகிறார். **உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மை சந்தித்திருக்கிறது** என்கிறார். அப்படி என்றால் அர்த்தம் என்ன? **நம்முடைய வாழ்க்கையை மாற்றி போடக்கூடிய அருணோதயமானது நம்மை சந்தித்திருக்கிறது. நம்மை காண வேண்டும் என்று, நம்மோடு உறவாட வேண்டும் என்பது தான் இதின் அர்த்தம்.** ஒருவர் நம்மோடு உறவாட வேண்டும் என நினைத்தால் அதற்கு ஒரு நோக்கம் இருக்கும். இந்த அருணோதயமாகிய இயேசு என்ன நோக்கத்தில் நம்முடைய வாழ்க்கையில் உறவாட வாஞ்சிக்கின்றார்.

## துக்கத்தின் மத்தியில் சந்தோஷம்

ஆசாரியனாகிய சகரியா மற்றும் அவர் மனைவி எலிசபெத் இருவரைக் குறித்து பார்ப்போம். லூக்கா 1: 5–7 வசனங்களை பார்க்கும் பொழுது **சகரியாவும் எலிசபெத்தும் குற்ற மற்றவர்களாய், நீதியுள்ளவர்களாய் இருந்தார்கள்.** இருப்பினும் எலிசபெத்து மலடியாக இருந்தாள். வயது சென்றும் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. அக்காலங்களில் குழந்தை இல்லை என்றால் ஒரு சாபமாக கருதப்பட்டது.

அதுவும் சகரியா ஒரு ஆசாரியனாக இருந்தபடியால் அவன் ஆசாரிய ஊழியம் செய்ய முடியாதபடிக்கு சக ஆசாரியர்கள் அவனை இழிவுபடுத்தினார்கள் என்று யூதசரித்திரம் கூறுகிறது. அச்சமயத்தில் லூக்கா 1:11–20 வசனங்களில் வாசிக்கிறபடி **“தேவ தூதனாகிய காபிரியேல் சகரியாவுக்கு தோன்றி எலிசபெத் ஒரு குமாரனை பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பெயரிடுவாயாக, உங்களுக்கு சந்தோஷமும், மகிழ்ச்சியும் உண்டாகும், அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்”** என்று கூறுகிறான்.

**Tamil Whats App No**
**95975 55066**

பாருங்கள் குழந்தையற்ற தம்பதிக்கு, வயது முதிர்ந்த தம்பதிக்கு அதிசயங்கள் நடந்து அவர்களுக்கு சந்தோஷம் உண்டானது. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட குமாரனாகிய யோவான் இயேசு கிறிஸ்துவின் முன்னோடியாக **வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தமாக அனுப்பப்பட்டான்.** இயேசுவின் பிறப்பு இந்த உலகத்தில் நடந்தபடியால் தான் யோவான் இந்த உலகிற்கு அனுப்பப்பட்டான். சாத்தியமற்ற, நடக்கவே நடக்காது என்று சொல்லப்பட்ட ஒரு அற்புதம் சகரியாவுக்கும், எலிசபெத்துக்கும் நடந்தது. இந்த அற்புதத்தை குறித்து தேவ தூதனாகிய காபிரியேல் மரியாளிடத்தில் சொல்லும் பொழுது,

**"தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை"**
**(லூக்கா 1: 37)**

என்று கூறுகிறான். இது மாத்திரமல்ல, யோவான் ஸ்நானன் தாயின் வயிற்றிலேயே பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவனாய் அநேகருடைய பாவத்தை சுட்டிக் காட்டுகிறவனாக, பிதாக்களுடைய இருதயங்களை பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களின் ஞானத்திற்கும் திருப்புகிறவனாக இருந்தான். உண்மையாகவே அவன் பிறப்பின் நிமித்தம் அநேகர் சந்தோஷம் அடைந்தார்கள்.

ஒரு சிறிய ஊரில் பென்சில் தயாரிக்கும் தொழிற்சாலை இருந்தது. அந்த தொழிற்சாலையின் நிறுவனர் மிகுந்த தேவ பக்தியுள்ளவர், தயாள குணமுள்ளவர். அந்த ஊரில் உள்ள மக்களில் அநேகர் அந்த பென்சில் தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்தனர். அந்த தொழிற்சாலையின் மூலம் அநேக ஏழை குடும்பங்களுக்கு உதவிகள் செய்யப்பட்டன. படிக்க வசதியற்ற ஏழை பிள்ளைகளுக்கு அந்த தொழிற்சாலையே முழு செலவையும் ஏற்றுக்கொண்டு படிக்க வைத்தது.

இப்படியிருக்க திடீரென்று ஒரு நாள் அந்த தொழிற்சாலையின் நிறுவனர் மாரடைப்பால் இறந்து விட்டார். அவருக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். தகப்பனின் தொழிற்சாலையை தொடர்ந்து நடத்தி வந்தான். இருப்பினும் ஒரு சில மாதங்களில் அந்த தொழிற்சாலையை நடத்துவதில் மிகுந்த பண கஷ்டம் ஏற்பட்டது. பல முயற்சிகள் எடுத்தும் தொழிற்சாலையை நடத்த முடியாமற் போனது. வேறு வழியின்றி மிகுந்த துக்கத்தோடு அந்த தொழிற்சாலையை மூடி விட அந்த மகன் முடிவெடுத்தார். கொஞ்சம் கூட அவருக்கு அதில் விருப்பமில்லை என்றாலும் அவருக்கு வேறு வழி தெரியவில்லை. அங்கு வேலை பார்த்த அனைவரிடமும் அந்த துக்கமான செய்தியை அறிவித்தார். அந்த ஊரே துக்கத்தில் ஆழ்ந்தது. அது கிறிஸ்துமஸ் காலமாக இருந்தால்கூட அந்த ஊர் மக்களால் கிறிஸ்துமஸை சந்தோஷமாக கொண்டாட முடியவில்லை. பென்சில் தொழிற்சாலையை மூடப்போகிறார்களே, வருமானத்திற்கு நாம் என்ன செய்வது என்றே யோசித்துக்கொண்டிருந்தனர்.

நிறுவனருடைய மகன் தங்கள் தொழிற்சாலையோடு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தொலைபேசி வாயிலாகவும் இந்த துக்கச் செய்தியை அறிவித்துக்கொண்டிருந்தார். "நீங்கள் இந்நாள் வரை எங்கள் தொழிற்சாலையோடு இணைந்திருந்தமைக்கு நன்றி. தொடர்ந்து நடத்துவதற்கு போதுமான நிதிவசதி இல்லாத காரணத்தினால் விரைவில் தொழிற்சாலையை மூடப்போகிறோம்" என்று கூறினார்.

அவ்வாறு ஜான் என்ற நபருக்கு தொடர்புகொண்டபோது அவர் லைனில் கிடைக்கவில்லை. ஆகவே விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு, போனை வைத்துவிட்டார்.

இரண்டு நாட்கள் கழித்து அன்று கிறிஸ்துமஸ் நாள். அப்பொழுது நிறுவனருடைய மகனுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அந்த அழைப்பில் பேசியவர் **" நான் தான் திரு. ஜான். நீங்கள் உடனே என்னை நேரில் சந்திக்க வாருங்கள்"** என அழைப்பு விடுத்தார். ஏன் என்று விளக்கம் அளிக்கவில்லை.

எனவே நிறுவனரின் மகன் வேறு வழியின்றி மிகுந்த பாரத்துடன், துக்கத்துடன் அவரை சந்திக்க சென்றார். திரு.ஜான் அவரை அன்புடன் வரவேற்று, நலம் விசாரித்துவிட்டு, ஒரு காசோலையை அவர் கையில் கொடுத்தார். அது மிகப்பெரிய தொகைக்குரிய காசோலையாய் இருந்தது. நிறுவனரின் மகனுக்கு ஒன்றும் புரியவில்லை. அதிர்ச்சியடைந்தார். எதற்காக இவ்வளவு பெரிய தொகையை கொடுக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்.

அப்பொழுது திரு. ஜான் **"நீங்கள் தொடர்ந்து கம்பெனியை நடத்துவதற்கு போதுமான தொகையை தந்திருக்கிறேன். எனவே அந்த தொழிற்சாலையை மூடிவிடாதீர்கள். நான் சிறுவனாய் இருந்தப்பொழுது என்னுடைய குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தது. படிப்பு செலவிற்கு கூட காசு இல்லை. அப்பொழுது உங்கள் தந்தைதான்**

**எனக்கு பென்சில் தொழிற்சாலையில் பகுதி நேரமாக சிறிய வேலையை கொடுத்தார். அதுவுமில்லாமல் என்னுடைய முழு படிப்பு செலவையும் ஏற்றுக்கொண்டார். நான் படித்து பெரிய வேலைக்கு சென்று இன்றைக்கு இந்த நல்ல நிலையில் இருப்பதற்கு காரணம் உங்கள் தந்தைதான். ஆகவே தான் அதற்கு நன்றியாக இந்த தொகையை கொடுக்கிறேன்.**

**என்னைப்போன்ற அநேகருக்கு இந்த பென்சில் தொழிற்சாலை தொடர்ந்து உதவிக்கரம் நீட்டட்டும்"** என்று கூறினார்.
**திரு. ஜான்** அவர்களுடைய செயல் துக்கத்திலிருந்த அந்த நிறுவனரின் மகனுக்கு மாத்திரமல்ல, அந்த ஊருக்கே மிகுந்த சந்தோஷத்தை கொடுத்தது.

பிரியமானவர்களே! இன்றும் கூட நீங்கள் ஒருவேளை துக்கத்தில் இருக்கலாம். எனக்கெல்லாம் எதற்கு பண்டிகை என்று சொல்லி கலங்கிக் கொண்டிருக்கலாம். கிறிஸ்துவின் பிறப்பு வெறும் பண்டிகை அல்ல தேவ ஜனமே! உடைந்து போன உங்கள் இருதயங்களுக்கு, துக்கம் நிறைந்த உங்கள் உள்ளங்களுக்கு சந்தோஷத்தை கொண்டு வரும் ஒரு மாபெரும் ஔஷதமாகும். **இயேசு கிறிஸ்து நமக்கு துயரத்திற்கு பதிலாக ஆனந்த தைலத்தை கொடுக்கவே இந்த உலகிற்கு வந்தார்.(ஏசாயா 61:3) அவர் உங்களுக்கு அதிசயங்களை செய்து உங்கள் துக்கத்தை சந்தோஷமாய் மாற்றுவார் (யோவான் 16:20)** உங்கள் சூழ்நிலைகளின் நிமித்தம், உங்களுடைய பெலவீனங்களின் நிமித்தம் நீங்கள் ஒரு வேளை சோர்ந்துபோய் இருக்கலாம். சோர்ந்து போகாதிருங்கள். அவர் உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார்.

## குழப்பத்தின் மத்தியில் தெளிவு

எந்த ஒரு காரியத்தை நாம் செய்தாலும் அதிலே ஒரு பொருத்தமான முடிவு எடுப்பது தான் நமக்கு நல்லது, ஆசீர்வாதம். ஆனால் பல சமயங்களில் இந்த தெளிவு நம்மிடத்தில் காணப்படாமல் இருக்கிறது. குழப்பத்திலேயே நம் வாழ்க்கையை கடத்துகிறோம். இந்த குழப்பமே பல நேரங்களில் மக்களுக்குள் ஒரு பயத்தை ஏற்படுத்தி, தற்கொலைக்கு நேராக ஓட வைக்கின்றது. இந்த குழப்பத்தால் அநேகர் தன்னம்பிக்கை இல்லாமல், தைரியம் இல்லாமல் அடுத்த கட்ட முயற்சியை எடுக்க முடியாமல் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். ஆனால், **இயேசுவின் பிறப்பு நமக்கு நம்பிக்கையை கொடுக்கிறது. நமக்கு இருக்கிற எல்லா குழப்பங்களையும் நீக்கி தெளிவை உண்டாக்குகிறது.**

பிரியமானவர்களே! மரியாள் கர்ப்பம் தரித்ததை குறித்து யோசேப்பு மிகவும் குழப்பத்தோடு இருந்தான். ஒரு கன்னிகை கர்ப்பவதியாவது இந்நாட்களிலேயே பெரும் சர்ச்சைக்குரியதாகும். அப்படி என்றால் இயேசுவின் காலங்களில் அது எவ்வளவு பெரிய ஒரு பிரச்சனையை உருவாக்கி இருக்கும். எனவேதான் யோசேப்பு மிகவும் பயந்து குழப்பத்தோடு இருந்தான்.

ஆனால் தேவனோ அவன் குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளிவைக்கும் படியாக **மத்தேயு 1:19 முதல் 25** வசனங்களில் நாம் பார்க்கிறபடி தேவதூதன் யோசேப்பை நோக்கி,

**உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே, அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது**

என்று கூறுகிறான். தேவதூதன் சொன்ன வார்த்தையின் நிமித்தம் யோசேப்பு தன் மனைவியை சேர்த்துக்கொண்டான். யோசேப்பிடத்தில் காணப்பட்ட சகல சந்தேகங்களும், பயங்களும், உலகத்தை குறித்ததாகவே இருந்தது.

அன்பு சகோதர, சகோதரிகளே! நமக்கும் கூட இந்த உலகத்தில் நம்மை சுற்றி உள்ளவர்கள் நம்மை சார்ந்து இருக்கிறவர்கள், நம்மை விரோதிக்கிறவர்களை எல்லாம் பார்க்கும் பொழுது "சமுதாயம் என்னை எப்படி நடத்துமோ? சமுதாயம் என்ன சொல்லுமோ? சமுதாயம் எப்படி ஏற்றுக் கொள்ளுமோ? என்றே புலம்பி கொண்டிருக்கிறோம். பயப்படாதீர்கள்! நீங்கள் நடக்க வேண்டிய வழியை அவர் உங்களுக்கு தெளிவாக காண்பிப்பார்.

சாஸ்திரிகளுடைய பயணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். **மத்தேயு 2:1 முதல் 12** ல் பார்க்கிறபடி, இரண்டு முறை அவர்கள் குழப்பம் அடைகின்றார்கள். முதல்முறை ஏரோது ராஜாவினிடத்தில் போய் கேட்கிறார்கள். அப்போதும் அவர்களுக்கு சந்தேகம் தீரவில்லை. **மத்தேயு 2:9**–ல் பார்க்கிறபடி, அவர்கள் ராஜா சொன்னதை கேட்டுப் போகையில் கிழக்கிலே அவர்கள் கண்ட நட்சத்திரம் அவர்களுக்கு முன் சென்றது.

இரண்டாவது முறை பிள்ளையை பார்த்துவிட்டு என்னிடம் வாருங்கள் என்று ஏரோது ராஜா அவர்களிடம் சொல்லி அனுப்பினான். ஆனால் 12–ம் வசனத்தில் பார்க்கிறபடி தேவதூதன் அவர்களை வேறு வழியாய் திருப்பி அனுப்புகின்றான்.

பிரியமானவர்களே!

"நீங்களும் கூட அந்த சாஸ்திரிகளை போல யாரை நம்பி, யாரிடம் உதவிக்கு செல்ல வேண்டும் என்று நினைத்து அங்கலாய்த்து கொண்டிருக்கலாம். உங்களோடு இம்மானுவேல் இருக்கின்றார். அதை ஒரு போதும் மறந்து போகாதீர்கள்! அவர் உங்களை வழி நடத்துகிறார். உங்கள் ஐயங்களை தீர்ப்பார். உங்கள் பயத்திற்கு பதிலாக திட நம்பிக்கையையும், தைரியத்தையும் தருவார். எல்லாவற்றுக்கும் மேலாக பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் இருந்து உங்களை சகல நல்வழியிலும் நடத்தி வாழ்க்கையில் நம்பிக்கையை கொடுத்து முன்னேறச் செய்வார்.

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். 2தீமோ. 1:7

## தாழ்வின் மத்தியில் உயர்வு

இயேசுவின் பிறப்பில் பங்கேற்ற அனைத்து மக்களும் சாதாரண பின்னனியில் இருந்து வந்தவர்கள்தான். ஒருவரும் ராஜ பரம்பரை அல்ல, ஆளும் சந்ததி, பணக்காரர் அல்ல, உலகில் மற்றவர்களால் அறியப்பட்டவர்கள் அல்ல. தேவன் அவர்களை முன்குறித்தபடியால் அவர்களை அழைத்து அவர்களை உயர்த்தினார். மரியாள் ஒரு சாதாரண கன்னிப் பெண், அவளுக்கு தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்தது.**(லூக்கா 1:27,28,34,48) "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார், அடிமையானவர்களை உயர்த்தினார்"** என்று மரியாள் கூறுகிறாள்.

- **இயேசுவின் பிறப்பின் நிமித்தம் யாராலும் கண்டு கொள்ளப்படாத மரியாளுக்கு, மேசியாவை சுமந்த தாய் என்கிற மிகப்பெரிய அந்தஸ்து கிடைத்தது.**
- **பிள்ளையற்ற தம்பதியான சகரியா எலிசபெத் யோவான் ஸ்நானனை பெற்றெடுக்கிற பாக்கியம் கிடைத்தது.**
- **யாராலும் நினைக்கப்படாத மேய்ப்பர்களுக்கு முதலில் நற்செய்தியை சுமந்து சென்றவர்கள், மேசியாவை பார்த்தவர்கள் என்ற பாக்கியம் கிடைத்தது.**

ஆம்! இயேசு இந்த உலகிற்கு வந்ததே ஒருவராலும் நினைக்கப்படாதவர்களை உயர்த்தவும், வெறுக்கப்பட்டவர்களை, ஒதுக்கப்பட்டவர்களை, தாழ்ந்தவர்களை முன்னேற்றவும் தான். அவர் மனிதனை போல ஒரு போதும் சிந்திக்கவில்லை. மனிதன்! படிப்பு, அந்தஸ்து, பணம், பெருமை இவை எல்லாவற்றையும் பார்க்கிறான். ஆனால், இயேசுவோ இந்த உலகில் நினைப்படாத மக்களை, நேசிக்கப்படாத மக்களை, அருவருக்கப்பட்டவர்களை, ஒடுக்கப்பட்டவர்களை தேடிச் செல்கிறார். அவர் இந்த உலகத்தின் பணக்காரர்களுக்கு மாத்திரமல்ல, ஏழைகளுக்கும் தேவனாக இருந்தார். ராஜாக்கள் போற்றும் ராஜாவாக மாத்திரம் வரவில்லை. ஏழை எளியவர்களுக்கும் தகப்பனாய் வந்தார். இன்றும் நீங்கள் எல்லாராலும் ஒதுக்கப்பட்டவர்களாய் இருக்கலாம், உங்கள் குடும்பமே உங்களை நினைக்காமல் இருக்கலாம்,ஒருவேளை நீங்கள் பல விதங்களில் துன்பப்பட்டுக்கொண்டு இருக்கலாம். ஆனால் இயேசுவோ உங்களை இரட்சிக்க, உங்களை சந்தோஷப்படுத்த, உங்களை உயர்த்தவே இந்த உலகத்திற்கு வந்திருக்கிறார். இன்றும் அவர் உங்களை நேசிக்கிறார்.

**சங்கீதம் 136:23ல் பார்க்கிற படி "நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவர் கர்த்தரே, அவர் நம்மை ஒரு போதும் கைவிடமாட்டார்"**

ஆம் ! இம்மானுவேலாகிய நம் மேசியாவின் பிறப்பு உங்கள் குடும்பங்களிலும் அதிசயங்களை செய்யட்டும். சந்தோஷத்தை கொண்டு வரட்டும். குழப்பங்களை தீர்க்கட்டும், தெளிவை திட நம்பிக்கையை தரட்டும். உங்களை அரவணைத்து முத்தமிட்டு உங்களை நேசிக்கும் தேவ அன்பு இன்று உங்களுக்கும் வெளிப்படுவதாக! ஆமென்!

## முக்கிய அறிவிப்பு

ஜனவரி மாதம் 1-ம் தேதி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் புத்தாண்டு ஆசீர்வாதக் கூட்டம் நடைபெறும்.

ஆகவே டிசம்பர் மாதம் மட்டும் திருச்சியில் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடைபெறாது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

DECEMBER MONTH

# தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

2023

01 அவருக்கு **இயேசு** என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். (மத்.1:21)

02 இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு **இம்மானுவேல்** என்று பேரிடுவாள். (ஏசா.7:14)

03 என் ஜனமாகிய **இஸ்ரவேலை ஆளும் பிரபு** உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது. (மத்.2:6)

04 உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு **தீர்க்கதரிசியை** உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார். (உபா.18:15)

05 அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: **மேசியா**வைக் கண்டோம் என்று சொன்னான். (யோவான் 1:41)

06 அதற்கு நாத்தான் வேல்: ரபீ, **நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா** என்றான். (யோவான் 1:49)

07 இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற **தேவ ஆட்டுக்குட்டி.** (யோவான் 1:29)

08 தமது **முதற்பேறானவரை** உலகத்தில் பிரவேசிக்கச் செய்தபோது, தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள் என்றார்.(எபி.1:6)

09 எல்லா மனுபுத்திரரிலும் **நீர் மகாசவுந்தரியமுள்ளவர்**: உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது. (சங்.45:2)

10 மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான **பிரதான ஆசாரியர்** என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார். (எபி.5:10)

11 எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த **மெய்யான ஒளி.** (யோவான் 1:9)

12 **யூதருக்கு ராஜாவாக**ப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள். (மத்.2:2)

13 அந்த **வார்த்தை மாம்சமாகி,** கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். (யோவான் 1:14)

14 அவர்களுடைய **இரட்சிப்பின் அதிபதியை** உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது. (எபி.2:10)

15 **மகிமையின் ராஜா** உட்பிரவேசிப்பார். சங்.24:7

# DECEMBER MONTH
# தினசரி வாக்குத்தத்த வசனங்கள்
# 2023

16 என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் **நீதியின் சூரியன்** உதிக்கும். (மல்கி.4:2)

17 நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே **உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம்** நம்மைச் சந்தித்திருக்கிறது. (லூக்.1:79)

18 **ஈசாயின் வேரும்** புறஜாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவருமாகிய ஒருவர் தோன்றுவார். (ரோமர் 15:12)

19 இதோ, **உன் ராஜா** உன்னிடத்தில் வருகிறார். (சகரி.9:9)

20 அவர் அதரிசனமான **தேவனுடைய தற்சுரூபமும்,** சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். (கொலோ.1:15)

21 **ஒரு நட்சத்திரம்** யாக்கோபிலிருந்து உதிக்கும், **ஒரு செங்கோல்** இஸ்ரவேலிலிருந்து எழும்பும். (எண்.24:17)

22 இதோ, சாலொமோனிலும் **பெரியவர்** இங்கே இருக்கிறார். (மத்.12:42)

23 அவர் நாமம் **அதிசயமானவர், ஆலொசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானப்பிரபு** என்னப்படும். (ஏசா.9:6)

24 **இம்மானுவேல்** என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். (மத்.1:23)

25 நமக்கு **ஒரு பாலகன்** பிறந்தார்: நமக்கு **ஒரு குமாரன்** கொடுக்கப்பட்டார். (ஏசா.9:6)

26 அவளிடத்தில் **கிறிஸ்து** எனப்படுகிற இயேசு பிறந்தார். (மத்.1:16)

27 ஈசாயென்னும் அடி மரத்திலிருந்து **ஒரு துளிர்** தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். (ஏசா.11:1)

28 நான் **சாரோனின் ரோஜாவும்,** பள்ளத்தாக்குகளின் **லீலி புஷ்பமுமாயிருக்கிறேன்**(உன்.2:1)


29 நீர் ஜீவனுள்ள **தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து.** (மத்.16:16)

30 **என் மீட்பர்** உயிரோடிருக்கிறார். (யோபு 19:25)

31 **உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும்** உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. (வெளி.1:5)

# WE'RE HIRING

📍 Trichy



### ACCOUNTANT
(B.com. / M.com. Graduates)
Skills Required: Tally ERP 9

### DATA ENTRY OPERATORS
(Any UG / PG Candidates)
Skills Required: Good In Computing Skills

### CORRESPONDENCE
(Any UG / PG Candidates)
Skills Required: Typing & Computing Skills
(Tamil, English, Telugu)

### SOCIAL MEDIA EXECUTIVE
(Any UG / PG Candidates)
Skills Required: Good in social Media
Platforms, Good in English & Tamil

### VIDEO EDITORS
(Any UG / PG Candidates)
Skills Required: able to work in
Adobe Premiere Pro & After Effects

### GRAPHIC DESIGNERS
(Any UG / PG Candidates)
Skills Required: able to work in
Adobe photoshop & Illustrator

### CAMERAMAN
with adequate Experience

### DRIVERS-*URGENT NEED*) COOK, HOUSE KEEPERS

***Christians Preferred***
***Apt Remuneration will be paid***

**Apply to: ministryofjesushr@gmail.com**

# துதி அறிக்கை




திரு. மரிய பிரான்சிஸ், தஞ்சாவூர்.

## 6 வருட போராட்டம் நீங்கியது! 2 கோடி ரூபாய் சொத்து மீட்கப்பட்டது!

என் பெயர் மரிய பிரான்சிஸ். அன்பரின் ஊழியத்தின் பங்காளராக இருக்கிறேன். எனக்கு 1 ஏக்கர் 15 சென்ட் இடம் இருந்தது. அதை அரசாங்க சொத்து என சர்வே டிபார்ட்மெண்ட் சொல்லி விட்டது. அந்த இடத்தின் மதிப்பு 2 கோடி ஆகும். இதனால் நான் அதிக மனவேதனைக்கு உள்ளானேன். இது சம்பந்தமாக கடந்த 6 வருடங்களாக இரண்டு தாசில்தார், மூன்று RTO, இரண்டு கலெக்டரை பார்த்து பல மனுக்களை எழுதிக் கொடுத்தேன். எந்த சரியான தீர்வும் கிடைக்கவில்லை.

திருச்சியில் நடைபெறும் குடும்ப ஆசீர்வாத கூட்டத்திற்கு வரும்பொழுதெல்லாம் **Dr.** ஆனந்த ஸ்திரா, **Mrs.** மார்கிரேட் ஸ்திரா இருவரையும் நேரில் சந்தித்து இந்த காரியத்திற்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்வேன். அவர்கள் இருவரும் பாரத்துடன் ஜெபித்துவிட்டு **உங்கள் சொத்து உங்களை விட்டு போகாது** என உறுதியாக சொல்லி அனுப்பினார்கள். எனக்கு எழுதிய பதில் கடிதத்திலும் அதிகாரிகளின் கண்களில் உங்களுக்கு தயை கிடைக்கும் என எழுதியிருந்தார்கள். புதிதாக வந்த கலெக்டரிடம் சென்று என்னுடைய ஒரிஜினல் நகல்களை காண்பித்தேன்.

கர்த்தர் தாமே அந்த அதிகாரியின் கண்களில் எனக்கு தயை கிடைக்கச் செய்தார். அவர் அனைத்து Records-யும் பார்த்துவிட்டு, இது அரசாங்க சொத்து என தவறாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என கையெழுத்திட்டு கொடுத்தார். கணினியிலும் அவற்றை சரி செய்து, என்னுடைய சொத்து மீண்டும் என்னுடைய கைக்கு கிடைக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். எனக்காக பாரத்துடன் ஜெபித்த ஐயா, அம்மா இருவருக்கும் என் நன்றியை தெரிவிக்கிறேன்.

# நீதிமானின் ஜெபத்தை கர்த்தர் கேட்கிறார்!



திருமதி. லதா, தென்காசி.

என் பெயர் லதா. 2020-ம் ஆண்டு என் கணவருக்கு திடீரென ஒரு நாள் **fits** வந்தது. மருத்துவமனைக்கு சென்ற பொழுது பரிசோதனையில் கணவருக்கு **brain tumor** உள்ளது. கடைசி கட்டத்தில் இருக்கிறார் என சொன்னார்கள். உடனே ஆப்ரேஷன் செய்ய வேண்டும் எனவும், ஆப்ரேஷனுக்குப் பிறகு அவரால் பேச முடியாது, ஒருபக்க கை, கால் செயலிழந்து போகும் என மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள். இதனால் நான் என்ன செய்யப் போகிறேன் என தவித்து நின்றேன். உடனே அன்பரின் ஊழியத்திற்கு தொலைபேசி வாயிலாக என் கணவருடைய நிலையை அங்குள்ள ஜெப ஊழியரிடம் சொன்னேன். அதன்பின் **Dr.** ஆனந்த ஸ்திரா அவர்கள் என் கணவருக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். மகளே, கலங்காதே கர்த்தர் நிச்சயம் உன் கணவருக்கு ஒரு அற்புதம் செய்வார். நான் தொடர்ந்து ஜெபிக்கிறேன். என்றார்.

ஆகஸ்ட் மாதம் 4-ம் தேதி இரவு 8 மணிநேரம் என் கணவருக்கு ஆப்ரேஷன் நடந்தது. ஆப்ரேஷன் முடிந்தப்பிறகு மருத்துவர் என் கணவரை பரிசோதித்துப் பார்த்தார். என் கணவர் நன்றாக பேசினார். அனைத்தையும் சரியாக அடையாளம் கண்டுகொண்டார். நன்றாக நடந்தார். இதைக்கண்ட மருத்துவரே ஆச்சரியப்பட்டார். என் கணவரை இம்மட்டும் நல்ல சுகத்துடன் பாதுகாத்து வருகிற கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். என் கணவருக்காக பாரத்துடன் ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.


## குடும்பங்களுக்கான ஆலோசனை மற்றும் தனி ஜெபம்

நாள் : டிசம்பர் 9 (சனிக்கிழமை)
நேரம் : காலை 9:30 முதல் - 1:30 மணி வரை
மாலை 4:30 முதல் - 8:00 மணி வரை
இடம் : அபிஷேக் காம்ப்ளக்ஸ், மெத்தை கடை மாடி,
WCC ரோடு, நாகர்கோவில்

ஆலோசனை மற்றும் ஜெபம்

தொடர்புக்கு:
0431-2741922,
94888 45627



Dr.ஆனந்த ஸ்திரா, Mrs. மார்கிரேட் ஸ்திரா

# சத்துருவின் போராட்டத்திலிருந்து அற்புத விடுதலை! படிப்பில் உயர்வு!



திருமதி. ரோஸி விமலா, பழைய பெருங்களத்தூர்.

என் பெயர் ரோஸி விமலா. என்னுடைய இளைய மகன் பெயர் சாம் சுந்தர் சிங். அவன் இரவு நேரத்தில் தூங்காமல் இரவு முழுவதும் நடந்துக் கொண்டே இருப்பான். விடியற்காலை 4 மணிக்குதான் தூங்குவான். இதைப் பார்த்து நான் கண்ணீர் வடிப்பேன்.

2021-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற கூட்டத்திற்கு என் மகனை அழைத்து வந்தேன். என் மகனைக் குறித்து Dr. ஆனந்த ஸ்திரா அவர்களிடம் சொன்னேன். என் மகனுடைய விடுதலைக்காக சகோதரர் பாரத்துடன் ஜெபித்தார்கள். அந்த நாளிலிருந்து மாந்திரீக ஆவியின் போராட்டத்திலிருந்து மகன் விடுதலையாகி நல்ல சுகத்துடன் இருக்கிறான். இரவில் நன்றாக தூங்குகிறான்.

என் மகன் படிப்பில் மந்தமாக இருந்தான். அதற்காகவும் சகோதரரிடம் சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன்.

சகோதரர் ஜெபித்துவிட்டு அவனை டிப்ளமோ கோர்ஸ்-ல் சேர்க்கும படி ஆலொசனை சொன்னார்கள். நாங்களும் அதன்படி செய்தோம். மகன் நன்றாக படித்து 2-வது இடத்தில் வரகர்த்தர் உதவி செய்தார்.

கர்த்தருக்கு மகிமையை செலுத்துகிறோம்.சகோதரர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம்.

என் மகன் படிப்பில் மந்தமாக இருந்தான். அதற்காகவும் சகோதரரிடம் சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். சகோதரர் ஜெபித்துவிட்டு அவனை டிப்ளமோ கோர்ஸ்-ல் சேர்க்கும்படி ஆலோசனை சொன்னார்கள். நாங்களும் அதன்படி செய்தோம். மகன் நன்றாக படித்து 2-வது இடத்தில் வர கர்த்தர் உதவிசெய்தார். கர்த்தருக்கு மகிமையை செலுத்துகிறோம். சகோதரர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம்.

# தம் ஊழியக்காரரின் வார்த்தையை கர்த்தர் நிறைவேற்றினார்!



திருமதி. தேன்மொழி, ஈரோடு.

என் பெயர் தேன்மொழி. 2009-ல் வீட்டு வாரியத்தின் மூலம் ஒரு வீட்டை விலைக்கு வாங்கினோம். முழு பணத்தையும் கொடுப்பதற்கு எங்களால் முடியவில்லை. அதனால் பத்திரம் வாங்க முடியாத சூழலில் இருந்தோம். நாங்கள் மீதம் தரவேண்டிய பணத்தை சேர்த்து மொத்தம் 39 இலட்சம் தர வேண்டும் எனவும், இல்லையென்றால் வீட்டிற்கு சீல் வைக்கும் நிலை ஏற்படும் எனவும் சொல்லி விட்டார்கள்.

அந்த நேரத்தில் 2021-ல் ஈரோட்டில் நடைபெற்ற தனி ஜெபத்தில் கலந்துக் கொண்டேன். **Dr.** ஆனந்த ஸ்திரா அவர்களிடம் கண்ணீரோடு இந்த பிரச்சனைக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் பாரத்துடன் ஜெபித்துவிட்டு இந்த மாதமே பத்திரம் வாங்கி விடுவாய், பணமும் கிடைக்கும் என சாதாரணமாக சொல்லி அனுப்பினார்கள்.

அதன்படி எங்கள் நெருங்கிய உறவினர் முன் வந்து 39 இலட்சம் ரூபாயை கொடுத்தார்கள். பத்திரத்தையும் பெற்றுக்கொண்டோம். வீட்டை சொந்தமாக்கவும் கர்த்தர் உதவி செய்தார். தம் ஊழியக்காரரின் வார்த்தையை கனப்படுத்துகிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**Telugu Whats App No:**
**91770 87860**



## கட்டி மறைந்தது ! தலைவலி நீங்கியது!

திருமதி. சாராள்,

என் பெயர் சாராள். நான் தலைவலியினால் அதிக கஷ்டப்பட்டேன். அதற்காக மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்தப் பொழுது என் தலையில் கட்டி இருக்கிறது என சொன்னார்கள். என் மகனும் தலைவலியினால் அதிக கஷ்டப்பட்டான். அதற்கான சிகிச்சை எடுத்தோம். மகனுக்கும் தலைவலி நீங்கவில்லை.

கடந்த முறை ஈரோட்டில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து **Dr.** ஆனந்த ஸ்திரா மற்றும் **Mrs.** மார்கிரேட் ஸ்திரா இருவரையும் சந்தித்து எனக்காகவும், மகனுக்காகவும் ஜெபிக்கும்படி சொன்னேன். எங்களுக்காக இருவரும் ஜெபித்தார்கள். மகனுடைய தலைவலி நீங்கியது. என்னுடைய தலையிலிருந்த கட்டியும் மறைந்தது. நாங்கள் இருவருமே நல்ல சுகத்துடன் இருக்கிறோம்.

என் கணவர் ஆவிக்குரிய ஜீவியத்தில் பின் மாற்றத்தில் இருந்தார். அதற்காகவும் ஜெபிக்கும்படி சொல்லியிருந்தேன். ஜெபத்திற்கு பின் என் கணவர் கர்த்தரை உறுதியாய் பற்றிக் கொண்டு வாழ்கிறார். நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம். அதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறோம். எங்களுக்காக ஜெபித்த ஐயா, அம்மா இருவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.



## முதுகு வலி நீங்கியது

திருமதி. முத்துசெல்வி,
காட்டுப்புத்தூர்.

என் பெயர் முத்துசெல்வி. நான் தையல் வேலை செய்து வருகிறேன். எனக்கு நீண்ட நாட்களாகவே முதுகு வலி இருந்து வந்தது. அந்த பலவீனத்துடன் வாழ்ந்து வந்தேன். ஒருநாள் கீழேவிழுந்து விட்டேன். மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்தப் பொழுது, முதுகுத் தண்டுவடத்தின் கடைசி டிஸ்க் விலகியிருக்கிறது எனவும், தையல் வேலை செய்யக் கூடாது எனவும் சொல்லி விட்டார்கள்.

கடந்த நாட்களில் அபிஷேக் காப்ளக்ஸில் நடைபெற்ற தனி ஜெபத்திற்கு வந்திருந்து, **Dr.**ஆனந்த ஸ்திரா அவர்களிடம் என் நிலையைசொல்லி எனக்காக ஜெபியுங்கள் என்றேன். சகோதரர் ஜெபித்துவிட்டு, இயேசு உன்னை குணமாக்குகிறார். இனி எல்லா வேலையும் செய்வாய் என சொல்லி அனுப்பினார்கள். சகோதரர் சொன்ன வார்த்தையின் படி கர்த்தர் எனக்கு அற்புத சுகம் தந்தார். முதுகு வலி இல்லை. நல்ல சுகத்துடன் இருக்கிறேன். எல்லா வேலைகளையும் செய்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!


## குடும்பங்களுக்கான ஆலோசனை மற்றும் தனி ஜெபம்

நாள் : டிசம்பர் 10 (ஞாயிற்றுகிழமை)
நேரம் : மாலை 3:00 – இரவு 7:00 மணி வரை
இடம் : செல்வி மஹால்,
காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்,
முருகன் குறிச்சி, பாளையங்கோட்டை,



**Dr.ஆனந்த ஸ்திரா, Mrs. மார்கிரேட் ஸ்திரா**

தொடர்புக்கு: 0431-2741922, 94888 45627

# ஒரு குழந்தை கேட்டோம்! கர்த்தர் இரண்டு குழந்தைகளை தந்தார்!




திருமதி. சரோஜம், திருவனந்தபுரம்.

நான் அன்பரின் ஊழியத்தின் மூலம் நடைபெறும் எல்லா கூட்டங்களுக்கும் தவறாமல் வந்து விடுவேன். என் மகனுக்கு திருமணம் முடிந்து 3 ஆண்டுகளாக குழந்தை இல்லை. **கடந்த முறை திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப் பொழுது Dr. ஆனந்த ஸ்திராஅவர்கள் என் மகனுக்காக ஊக்கமாய் ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டுஎன் மகனுக்கு இரட்டைக் குழந்தைகளை தந்து ஆசீர்வதித்திருக்கிறார். எனக்கு மூட்டுவலி இருந்தது. அதனால் நான் அதிக கஷ்டங்களை அனுபவித்தேன். சகோதரர் எனக்காக ஜெபித்தார்கள். அன்றிலிருந்து மூட்டுவலி இல்லை. நல்லசுகத்துடன் இருக்கிறேன்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!



திரு. நாகராஜ், புலியூர்.

# கர்த்தர் பாதுகாப்பை தந்தார்!

என் பெயர் நாகராஜ். சிறுவி யாபாரம் செய்து வருகிறேன். திருச்சியில் நடை பெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நான் கடந்த 10 வருடங்களாக தொடர்ந்து வந்துக் கொண்டிருக்கிறேன். அன்பரின் ஊழியத்திற்கு என்னால் முடிந்த காணிக்கையை தவறாமல் செலுத்தி வருகிறேன்.

**கடந்த அக்டோபர் மாதம் என் வியாபாரத்தின் நிமித்தம் வண்டியில் சென்றுக் கொண்டிருந்தப் பொழுது ஒரு இக்கட்டான சூழலில் விபத்து நேரிடாமல் கர்த்தர் என்னை அற்புதமாக பாதுகாத்தார்.**

**என் மகளுக்கும் அதே நாளன்று பள்ளியில் எதிர் பாராதவிதமாக சக மாணவியால் ஒரு பிரச்சனை ஏற்பட்டது. அந்த பிரச்சனையிலும் கர்த்தர் தாமேஎன் மகளையும் பாதுகாத்தார்.** கர்த்தருக்கு எங்களுடைய ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறோம்.

# மூன்று அற்புதங்கள் நடந்தது!



திருமதி. வள்ளியம்மா, ஈரோடு.

என் பெயர் வள்ளியம்மா. 2003–ல் ஈரோட்டில் நடை பெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தேன். கூட்டம் முடிந்து தனி ஜெபத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்தப் பொழுது **சகோதரர் எனக்காக ஜெபித்து விட்டு மூன்று அற்புதங்கள் உங்கள் வாழ்வில் நடக்கும் என சொன்னார்கள். சகோதரர் சொன்னபடி 2004–ல் மகன் பிறந்தான், 2007–ல் வேலை கிடைத்தது. 2008–ல் மகள் பிறந்தாள்.**

எனக்குள் கன நித்திரையின் ஆவி இருந்ததினால் சரியாக ஜெபிக்க முடியாமல் கஷ்டப்பட்டேன். 2023–ல் **நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தப் பொழுது, ஜெப வேளையில் அந்த ஆவி வெளியேறியது புதிய அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டேன்.** இந்த அற்புதங்களை செய்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

# விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

## ஞாயிறு தோறும்

**காலை 9.30 மணி – 11.30 மணி**

- ✓ அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ✓ அனல்மூட்டும் தேவ செய்தி
- ✓ உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்



ஜாதி, மத, இன வேறுபாடின்றி
அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில்
பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10-வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.

## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

### தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

நம்பிக்கை TELEVISION

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 முதல் 9.00 வரை

### தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

புதன், வியாழன், வெள்ளி,
இரவு 7.00 முதல் 7.30 வரை

### மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

HARVEST TV கேரளம்

சனி
இரவு 7.30 முதல் 8.00 வரை

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in

## குழந்தைபாக்கியம் கிடைத்தது! நோய் நீங்கியது!



திருமதி. அனிதா, திருச்சி.

என் பெயர் அனிதா. எனக்கு 36 வயதில்தான் திருமணம் ஆனது. அதன்பின் 2 முறை அபாஷன் ஆனது. அந்த சூழ்நிலையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் வந்து குழந்தைக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். அதன்பின் எனக்கு 38 வயதில் நார்மல் டெலிவரியில் ஆண் குழந்தை பிறந்தது. சகோதரர் சொன்ன தீர்க்க தரிசனத்தின்படி அடுத்து பெண் குழந்தையும் பிறந்தது.

கடந்த 3 மாதமாக **fungus** பிரச்சனையினால் நான் அதிக கஷ்டங்களை அனுபவித்தேன். இதற்காக மூன்று மருத்துவர்களை போய் பார்த்தேன். குணமாகவில்லை. செப்டம்பர் மாதம் திருச்சியில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நான் வந்திருந்து சகோதரர் அவர்களிடம் என் நிலையை சொன்னேன். சகோதரர் என் தலைமேல் கை வைத்து உருக்கமாய் ஜெபித்தார்கள். ஜெபத்திற்கு பின் **fungus** மறைந்து விட்டது. நல்ல சுகத்துடன் இருக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

## தாய், சேய் இருவரையும் கர்த்தர் பாதுகாத்தார்.



திருமதி. ஷர்மி, நாகர்கோவில்.

என் பெயர் ஷர்மி. 2020–ம் ஆண்டு என்னுடைய பிரசவ நேரத்தின் பொழுது குழந்தையின் துடிப்பு கம்மியாக இருந்தது. எந்த அசைவும் இல்லை. தண்ணீர் இல்லை. அதனால் நானும், குழந்தையும் ஆபத்தான நிலையில் இருப்பதாக சொன்னார்கள். அந்த நேரத்தில் நான் அன்பரின் ஊழியத்திற்கு போன் மூலம் தொடர்புக் கொண்டு எனக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். கர்த்தர் இரங்கினார். எவ்வித ஆபத்தும் இல்லாமல் நல்ல சுகத்துடன் குழந்தை பிறக்க கர்த்தர் உதவி செய்தார். எங்கள் இருவருடைய ஜீவனையும் பாதுகாத்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.





# S.J.SAVES TRUST-ன் அறப்பணிகள்

**“இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.” மத்.5:7**

S.J.Saves Trust-மூலமாக செய்யப்படுகிற அனைத்து நற்பணிகளின் வாயிலாக ஏழை, எளிய மாணவ, மாணவியர்களும், வறுமையில் வாடுகிற மக்களும், ஆதரவற்ற வயதானவர்களும் அதிகமாக பயன் அடைகிறார்கள்.

இந்தப்பணிக்கு முன்வந்து எங்களோடு இணைந்து இதுநாள் வரை நீங்கள் செய்த உதவிகளுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

நாம் பிறருடைய கஷ்டங்களை நினைக்கும்பொழுது, விசாரிக்கும்பொழுது கர்த்தர் நமது கஷ்டங்களை இயற்கையாகவே எடுத்துப்போடுவார். இது என் வாழ்க்கையில் அனுபவரீதியாக நான் கண்டதாகும்.

**“தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான் (நீதி.28:27)”**

ஆகவே கைம்மாறு கருதாமல் ஏழை மக்களுக்கு உதவி செய்யுங்கள். ஆதி அப்போஸ்தலர்கள், சீஷர்களைப் போல நாமும் ஏழைகளுக்கு உதவி செய்யும் பொழுது கர்த்தர் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டார்.

என்னுடைய பெலவீனங்களின் மத்தியிலும் நான் ஜீவிக்கிறேன் என்றால் அதற்கு ஒரே காரணம் கர்த்தருடைய கட்டளையின்படி சிறுமைப்பட்டவர்களுக்கு உதவுவது தான். எனவே நாம் இணைந்து ஏழைகளின் கண்ணீரை துடைப்போம். பிரதிபலன் கிடைக்க வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் உதவி செய்வதில்லை. கிறிஸ்து இயேசுவின் அன்பு நம்மை நெருக்கி ஏவுகிறபடியால் நற்பணிகளை செய்துக் கொண்டிருக்கின்றோம்.

**“அந்நாட்களில் விருந்துண்டு சந்தோஷங்கொண்டாடவும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்பவும், எளியவர்களுக்குத் தானதர்மஞ்செய்யவும் வேண்டுமென்று திட்டம்பண்ணினான்.**
**எஸ்தர் 9:22”**

## கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு ஏழை பிள்ளைகளுக்கு உற்சாகமாய் உதவி செய்யுங்கள்.




Trichy, South India
Charity Works
Charity Works
Charity Works

# S.J.S.T.

## மருத்துவமனை பணிகள்

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் பிரியமான பங்காளர்களே தொடர்ந்து நமது மருத்துவமனை பணிகளையும் நினைவுகூறுங்கள். மருத்துவமனையைச் சுற்றி ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. குறிப்பாக அம்மா பேட்டை, பூலாங்குளத்துப்பட்டி, புளுதேரி, ஐயக்கவுண்டன்பட்டி, வடசேரி, இனாம்குளத்தூர், ஆர்த்தி மலை, வண்ணாங் கோயில் மற்றும் பல கிராமங்கள் உள்ளன.

கிராமங்களில் உள்ள மக்கள் மருத்துவ சிகிச்சைக்கு செல்ல வேண்டுமானால் ஒன்று மணப்பாறைக்கு செல்ல வேண்டும் அல்லது திருச்சிக்கு வரவேண்டும். ஆகவே கிராம மக்களின் நலனை முன்னிட்டும், தேவையற்ற அலைச்சல்களை தவிர்க்கவும் அவர்கள் வசதிக்காக இந்த மையப்பகுதியில் மருத்துவமனை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு பாதுகாப்பான சிகிச்சைகளை தந்துக் கொண்டிருக்கிறோம்.

**மருத்துவமனையில் தியேட்டர் கட்ட வேண்டும். இதற்காக நாம் ஜெபிப்போம்!**
**உங்களால் இயன்ற உதவிகளையும் செய்யுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

### ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்

| | | |
|---|---|---|
| Bank A/C Name: | | SJ Saves Trust |
| Account No. | : | 01915010875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile bank |
| Branch | : | Palakarai , Trichy. |
| IFSC Code | : | TMBL0000019 |
| A/C Type | : | Current |

### மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்

| | | |
|---|---|---|
| Bank A/C Name: | | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank Of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch. |
| IFSC Code | : | SBIN0000930 |
| A/C Type | : | Current |

## IT Act - ன் படி. 80G Exemption உண்டு









காணத்தவறாதீர்கள்!

கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சி

**Ministry of Jesus Youtube channel-லில்**

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)
Online Donation (Website)
Bank Account / QR Code
UPI / Google pay / Paytm / Phonepe

UPI Google Pay Paytm PhonePe

இந்த QR code-ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.

### வங்கிக் கணக்குகளின் விபரம்



| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

IFS Code: SBIN 0000930
State Bank of India, Cantonment, Trichy Main Branch.

காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)

**Cell no. 94888 45627, 80987 42638**

உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.

# உலக செய்திகள்

- 1918 ஆம் ஆண்டு அமெரிக்க அஞ்சல் துறை ஒரு ஸ்டாம்ப் வெளியிட்டது. அதில், அந்த நேரத்தில் பிரபலமான "காடிஸ் ஜெ என்–4" என்ற விமானத்தின் படம் இடம்பெற்றது.

- அந்த காலத்தில் ஸ்டாம்பு தயாரிப்பு முறை வித்தியாசமானது. அச்சுப் பலகை மீது பேப்பரை வைத்து, கைகளால் உருட்டி, பிரிண்ட் எடுத்தனர். அப்படியாக அச்சுப்பலகை அடுக்கும் போது, விமானத்தின் படம் தலைகீழாக வைக்கப்பட்டு அச்சிடப்பட்டது. ஒரு ஷீட் – 100 ஸ்டாம்ப் – அச்சிட்டு முடித்த பிறகு தான் தவறு தெரிய வந்தது. பிறகு படம் இருந்த அச்சு சட்டத்தை திருத்தமாக வைத்து மற்ற ஸ்டாம்புகள் அச்சிடப்பட்டன.

- முதலில் அச்சிடப்பட்ட 100 ஸ்டாம்புகளை, அஞ்சல் தலை சேகரிப்போர் அரிய கலைப் பொருளாக கருதுகின்றனர். இத்தகைய ஸ்டாம்ப் நவம்பர் 15ம் தேதி நியூயார்க்கில் ஏலத்திற்கு வந்தது. இந்த ஸ்டாம்பை 20 லட்சம் டாலர் கொடுத்து வாங்கியுள்ளார் சார்லஸ் ஹேக். (76). இவர் 2000ம் ஆண்டில் இதே போன்ற ஸ்டாம்பை ஏற்கனவே 3 லட்சம் டாலருக்கு ஏலத்தில் எடுத்தவர்.



ஐரோப்பாவில் பெல்ஜியம், நெதர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் கொலையான 22 பெண்களின் அடையாளம் காண்பதற்காக "ஆப்ரேஷன் ஐடன்டிபை மீ" என்ற திட்டப் பணியை போலீசார் கடந்த மே மாதம் தொடங்கினர். இந்த 22 பேரின் முகம், ஆடைகள், அணிந்த நகைகள் போன்ற பலவற்றையும் சமூக வலைதளத்தில் பதிவிட்டனர். இந்த முயற்சி வீண்போகவில்லை.

- ரீட்டா ராபர்ட் என்ற பெண்ணின் கையில் பச்சை குத்தப்பட்டிருந்த பூக்கள் மூலம், இங்கிலாந்தில் கார்டிப் பகுதியில் உள்ள அவளது பெற்றோர் அடையாளம் கண்டு தொடர்புகொண்டனர்.

- பெல்ஜியம் நகருக்கு 1992ம் ஆண்டு பிப்ரவரி மாதம் சுற்றுலா வந்தவர், இரண்டு மாதங்களுக்குப் பிறகு நதியோரம் சடலமாக மீட்கப்பட்டார். "எங்களைப் பொறுத்தவரை இது 30 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்த வெற்றி செய்தி. ஆனால் அந்த குடும்பத்திற்கு இது தாங்க முடியாத சோகம்" என்கிறார்கள் போலீசார்.







# பத்திரிக்கை வாசகர்களுக்கான அன்பு வேண்டுகோள்

- அன்பரின் ஊழிய பத்திரிக்கையின் வருட சந்தா தொகையை இதுவரை செலுத்தாதவர்கள் உடனடியாக சந்தா தொகையை செலுத்திபத்திரிக்கை ஊழியத்திற்கு உதவும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
- உங்கள் முகவரியில் மாற்றம் இருந்தாலும் எங்களுக்கு தெரிவியுங்கள். உங்கள் முகவரிக்கு இரண்டு பத்திரிக்கைகள் வந்தால் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்.
- செல்: 80987 42638

# உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்

## தாம்பரம், வேலூர், ஈரோடு, நாகர்கோவில்

### தாம்பரம்

நாள் : ஜனவரி 15 திங்கள் கிழமை (அரசு விடுமுறை)

நேரம் : காலை 9:30 முதல் மதியம் 1:00 மணி வரை

இடம் : J.J. மஹால், L.K.S. தங்க மாளிகை எதிரில், G.S.T. மெயின் ரோடு, கடப்பேரி, மேற்கு தாம்பரம், சென்னை.

### வேலூர்

நாள் : ஜனவரி 16 செவ்வாய் கிழமை (அரசு விடுமுறை)

நேரம் : காலை 9:30 முதல் மதியம் 1:00 மணி வரை

இடம் : ஏலிம் கார்டன், வேலூர் புதிய பஸ் நிலையம் எதிரில், சர்வே எண்:605, பாலதோரம் தெரு, வேலூர்.

### ஈரோடு

நாள் : ஜனவரி 17 புதன் கிழமை (அரசு விடுமுறை)

நேரம் : காலை 9:30 முதல் மதியம் 1:00மணி வரை

இடம் : C.S.I. பாரிஸ் ஹால், டெலி போன் பவன் அருகில், பிரப் ரோடு, ஈரோடு.



### நாகர்கோவில்

நாள் : ஜனவரி 25 வியாழக்கிழமை (அரசு விடுமுறை)

நேரம் : காலை 9:30 முதல் – 1:00 மணி வரை

இடம் : அபிஷேக் காம்ப்ளக்ஸ், மெத்தை கடை மாடி, WCC ரோடு, நாகர்கோவில்

தேவசெய்தி

**Rev.Dr.A. ஜாஷ்வா**

**தொடர்புக்கு: 0431-2741922, 94888 45627**

Rev.Dr.A. ஜாஷ்வா அவர்கள்

# ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்! தேவ நாமம் மகிமைக்காக!



## அரசு மருத்துவர் பணி கிடைத்தது!



திரு.ராஜன் பாபு, திருநெல்வேலி.

என் பெயர் ராஜன் பாபு. அன்பரின் ஊழியத்தின் மூலம் நடத்தப்படுகிற அனைத்து கூட்டங்களுக்கும் நான் தவறாமல் கலந்து கொள்வேன். என் மகள் சித்த மருத்துவம் படித்து அரசு பணிக்கான தேர்வு எழுதியிருந்த சமயத்தில் திருநெல்வேலியில் கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் நான் கலந்துக் கொண்டு,

**Rev. Dr. A. ஜாஷ்வா** அவர்களிடம் என் மகளுடைய வேலைக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

பாஸ்டர் அவர்கள் என் மகளுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். கர்த்தரின் கிருபையால் மகள் தேர்வில் வெற்றி பெற்றாள். அவளுக்கு அரசு மருத்துவர் பணியும் கிடைத்தது.

கர்த்தரை ஸ்தோத்தரித்து அன்பரின் ஊழியத்திற்கு என்னுடைய பொருத்தனை காணிக்கையையும் செலுத்தினேன். ஜெபித்த பாஸ்டர் அவர்களுக்கும் என் நன்றியை அன்போடு தெரிவிக்கிறேன்.

## 10 வருட அல்சர் நோயிலிருந்து அற்புத விடுதலை!



திருமதி. ராணி, பவானி.

என் பெயர் ராணி. 2013-ம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற கூட்டத்திற்கு இக்கட்டான சூழ்நிலை மத்தியில் ஆண்டவர் என்னை அழைத்து வந்தார். கூட்டத்தின் கடைசி வரிசையில் மிகுந்த சோர்வுடன் அமர்ந்திருந்தேன். **Rev.Dr.A. ஜாஷ்வா** அவர்கள் செய்தியின் இறுதியில் வியாதி உள்ளவர்களுக்காக ஜெபம் ஏறெடுத்தார்கள். அந்த நேரத்தில் ஒரு கரம் என்னுடைய அல்சர் வியாதியை அப்படியே பிடுங்கி எறிவது போல இருந்தது. அந்த நாளிலிருந்து எனக்கு அல்சர் வியாதியே இல்லை. அற்புத சுகத்தைக் கொடுத்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

மேலும் சில நாட்களாக என்னால் சரியாக ஜெபிக்க முடியவில்லை. கடந்த அக்டோபர் மாதம் ஈரோட்டில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தேன். ஆண்டவர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் என்னை நிரப்பினார். இப்பொழுது முன்பைவிட என்னால் நன்றாக ஜெபிக்க முடிகிறது. தேவனுக்கே மகிமை!

Regd.with RNI No.TNTAM/2014/60345, Postal Regd.No. TRY/092/2022-2024 (With prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of Publication 25th or 26th of every mont




# கிறிஸ்துமஸ் ஆராதனை

**டிசம்பர் 25 திங்கள் கிழமை**

**அதிகாலை 6:30 மணி**

டெலிவரன்ஸ் சர்ச்,
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி– 18

கிறிஸ்துமஸ் செய்தி **Dr.ஆனந்த ஸ்திரா**

குறிப்பு: இப்பண்டிகை ஆராதனையில் பரிசுத்த திருவிருந்து ஆசரிக்கப்படும்.

**தொடர்புக்கு: 94888 45627, 99421 66066**

# புத்தாண்டு ஆசீர்வாத ஆராதனை

**டிசம்பர் 31 ஞாயிறு**

நேரம் : இரவு 10:30 மணி

இடம் : டெலிவரன்ஸ் சர்ச்,
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி– 18

புத்தாண்டு வாக்குத்தத்தச் செய்தி

**Rev.Dr.A.ஜாஷ்வா**



**01** ஜனவரி திங்கள் கிழமை

**2024** அன்பரின் ஊழிய பங்காளர்களுக்கான புத்தாண்டு வாக்குத்தத்தக் கூட்டம்!

மதியம் 3:00 மணி முதல் இரவு 7.00 மணி வரை

அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர்,திருச்சி–18.
புத்தாண்டு வாக்குத்தத்தச் செய்தி

**Dr.ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்**




**Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from**
**No.45, SeventhiPillaiyarKoil street, Woraiyur, Trichy – 620 003 and printed by Mr.D.AsuSelvaraj**
**at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West – 626 124, South India**
**Editor: Dr. Jane Joshua, M.B.A. Ph.D.,**